**தமிழ்நாடு அரசு**

**தொழில்நுட்பக் கல்வி இயக்ககம், சென்னை 600 025.**

**அலுவலக தானியக்கச் சான்றிதழ் தேர்வு**

**(CERTIFICATE COURSE IN COMPUTER ON OFFICE AUTOMATION) ஜுன் 2025**

**(ஆகஸ்ட் 2024)**

**மறுமதிப்பீடு அறிவிக்கை 18.07.2025**

**பார்வை:** அரசாணை நிலை எண்.253 உயர்கல்வி (பி1) துறை, நாள். 26.09.2023.

---------

ஜுன் 2025 (ஆகஸ்ட் 2024)-க்கான அலுவலக தானியக்கச் சான்றிதழ் தேர்வு முடிவுகள் 15,07,2025 அன்று வெளியிடப்பட்டது. இந்நிலையில் பார்வையில் காணும் அரசாணையில் அலுவலக தானியக்கச் சான்றிதழ் தேர்வுகளுக்கான மறுமதிப்பீடு தொடர்பான வழிகாட்டு நெறிமுறைகள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மாணாக்கர்களின் நலனை கருத்தில் கொண்டு அலுவலக தானியக்கச் சான்றிதழ் தேர்வுக்கான தேர்வுத் தாள் நகல் பெறுவதற்கும் (scanned Copy) மற்றும் மறுமதிப்பீடு செய்வதற்கும் (பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு) **tndtegteonline.in** என்ற இணையதளம் மூலமாக விண்ணப்பம் செய்துகொள்ளலாம்,

**அச்சுப்பகர்ப்பு நகல் மற்றும் மறுமதிப்பீட்டிற்காக விண்ணப்பிப்பதற்கான கட்டணம்**

**( Revaluation Process)**

| வ. எண். | விவரம் | கட்டணம் |
|---|---|---|
| 1. | விடைத்தாள்களின் அச்சுப் பகர்ப்பு நகல் பெறுவதற்கான விண்ணப்பக் கட்டணம் | ரூ.300/- |
| 2. | விடைத்தாள்களை மறுமதிப்பீடு செய்வதற்கான விண்ணப்பக் கட்டணம் | ரூ.600/- |

**விடைத்தாள் நகல் வழங்குதல், மறுமதிப்பீடு செய்வதற்கான கடைபிடிக்க வேண்டிய நிபந்தனைகள்:-**

1. கணினி அலுவலகத் தானியக்கச் சான்றிதழ் (CERTIFICATE COURSE IN COMPUTER ON OFFICE AUTOMATION) தேர்வின் **விடைத்தாள் நகல் பெறுவதற்கான அறிவிப்பு வெளியிட்ட தேதியிலிருந்து 5**

**நாட்களுக்குள்** இணையதளம் (ஆன்லைன்) மூலம் விண்ணப்பிக்க வேண்டும். அத்தேர்விற்கான **விடைத்தாள்கள் மறுமதிப்பீடு செய்வதற்கான அறிவிப்புகள் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து 5 நாட்களுக்குள்** விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பதாரர்கள் இணையதளம் மூலம் (ONLINE) விண்ணப்பிக்காமல் தபால் (OFFLINE) மூலம் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

2. கணினி அலுவலகத் தானியக்கச் சான்றிதழ் (COMPUTER ON OFFICE AUTOMATION) தேர்வு எழுதிய மாணாக்கர்கள் அத்தேர்வில் ஒருமுறை தான் மறுமதிப்பீடு கோரலாம்.
3. கணினி அலுவலகத் தானியக்கச் சான்றிதழ் (COMPUTER ON OFFICE AUTOMATION) தேர்வில் எழுத்துமுறை தேர்விற்கு மட்டும் மறுமதிப்பீடு கோர அனுமதிக்கப்படுவர். செய்முறை (PRACTICAL EXAM ) தேர்விற்கு மறுமதிப்பீடு கிடையாது.
4. கணினி அலுவலகத் தானியக்கச் சான்றிதழ் (CERTIFICATE COURSE IN COMPUTER ON OFFICE AUTOMATION) தேர்வில் மறுகூட்டல் முறை கிடையாது.
5. கணினி அலுவலகத் தானியக்கச் சான்றிதழ் (CERTIFICATE COURSE IN COMPUTER ON OFFICE AUTOMATION) தேர்வு நடைபெற்ற நேரத்தில் விதிமுறைகளை மீறி செயல்புரிந்த மாணாக்கர்களது விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட மாட்டது.
6. மறுமதிப்பீடு செய்த பின்னர், தேர்வு முடிவுகள் இயக்கக ( https://tndtegteonline.in/GTEOnline/ ) இணையதளத்தில் வெளியிடப்படும்.

**இணையதளம் வழியாக விடைத்தாள் நகல் பெற விரும்புபவர்களுக்கான முக்கிய தேதிகள்:-**

**(COA - Re-evaluation Schedule)**

| | |
|---|---|
| மறுமதிப்பீட்டிற்காக அச்சுப் பகர்ப்பு நகல் (Scan Copy) பெற விண்ணப்பிக்க ஆரம்ப நாள் (விண்ணப்பக் கட்டணம் ரூ.300/-) | 18.07.2025 |
| அச்சுப் பகர்ப்பு நகல் (Scan Copy) பெற விண்ணப்பிக்க கடைசி நாள் | 22.07.2025 |
| அச்சுப்பகர்ப்பு நகல்( Scan Copy) பதிவேற்றம் செய்யும் நாள் | 25.07.2025 |
| மறுமதிப்பீடு விண்ணப்பிக்க ஆரம்ப நாள் | 25.07.2025 |
| மறுமதிப்பீடு விண்ணப்பிக்க கடைசி நாள் | 29.07.2025 |
| தேர்வு முடிவு வெளியிடப்படும் நாள் | 04.08.2025 |

Sd/-

CTE/ CBE